செ.வெ.எண்: 28/அக்டோபர் நாள் : 21.10.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 113-வது பிறந்தநாள் விழா மற்றும் 58-வது குருபூஜை தொடர்பான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் வருகின்ற அக்டோபர் 30 அன்று நடைபெறவுள்ள 113-வது பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிறந்தநாள் விழா மற்றும் 58-வது குருபூஜை விழாவை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பசும்பொன் கிராமத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வினைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

கமுதி வட்டம், பசும்பொன் கிராமத்தில் உள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக அன்னாரது பிறந்த நாள் விழா கொண்டாடப்படவுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் கட்டுப்படுத்துவதற்காக அரசு அறிவுரைகளின்படி கு.வி.மு.ச. பிரிவு 144-ன்கீழ் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதி அரசு அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். மரியாதை செலுத்த வருகை தரும் அரசியல் கட்சி தலைவர்கள்/பிரதிநிகள் மற்றும் அமைப்புகளின் தலைவர்கள்/பிரதிநிதிகள் (5 நபர்களுக்கு மிகாமல்) கட்டாயம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன் அனுமதி மற்றும் வாகனத்திற்கான முன் அனுமதி பெற்று அரசு அறிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி உரிய சமூக இடைவெளியை கடைபிடித்து மரியாதை செலுத்தலாம்.

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தருவோர் சிரமப்படாத வகையில் போதிய பாதுகாப்பு தடுப்புகள் (பாரிகார்டு) அமைத்திட பொதுப்பணித்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 8000 காவல்துறை அலுவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அவசரகால சூழ்நிலையினை எதிர்கொள்ள ஏதுவாக 11 மருத்துவக்குழுக்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் அமைத்து தயார்நிலையில் வைத்திட பொது சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், போதிய குடிநீர் வசதி ஏற்படுத்திடவும், தற்காலிக கழிப்பறைகள் மற்றும் குப்பைத்தொட்டிகள் அமைத்திடவும் உள்ளாட்சி துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேலு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் திரு.பி.செந்தில்குமார், திரு.வெங்கிடகிருஷ்ணன், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் திரு.முருகன், பரமக்குடி பொது சுகாதார துறை துணை இயக்குநர் மரு.பி.இந்திரா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீர பாண்டியன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.குருதிவேல்மாறன் உள்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**